# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **41/ந/2017**

ஆணை எண். **50/2018**

நாள் : **13/03/2018**

**திரு இரும்பொறை (எ) பிச்சை,**
**மணப்பாறை.**
– **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**மணப்பாறை நகராட்சி,**
**மணப்பாறை.**
– **எதிர் மனுதாரர்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை, எண்.23/13, சொக்கலிங்கம் தெரு முகவரியைச் சேர்ந்த திரு இரும்பொறை (எ) பிச்சை அவர்களின் 06.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 07.12.2017 அன்று பெறப்பட்டு, 41/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை, எண்.23/13, சொக்கலிங்கம் தெரு முகவரியைச் சேர்ந்த திரு இரும்பொறை (எ) பிச்சை என்பவர் தான் மணப்பாறை நகராட்சி ஓய்வூதிய சங்கத்தின் தலைவராக இருப்பதாகத் தெரிவித்து, ஓய்வூதியர்களின் கோரிக்கை மீது இரக்கமும், வேகமும் கூடிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு, ரூபாய் பத்து மதிப்பிலான நீதிமன்ற வில்லை ஒட்டப்பட்ட கீழ்க்காணும் நபர்கள் பற்றிய படிவங்களை மட்டுமே இம்முறை மன்ற நடுவத்தில் தாக்கல் செய்துள்ளார்.

| வ.எண். | திரு / திருமதி |
|---|---|
| 1. | A. சுலோசனா, மணப்பாறை |
| 2. | G. நல்லுசாமி, மணப்பாறை |
| 3. | K. பழனி, மணப்பாறை |
| 4. | R. அந்தோணி, மணப்பாறை |
| 5. | E. விசுவாசம், மணப்பாறை |
| 6. | R. பரமசிவம், மணப்பாறை |
| 7. | A. செல்லத்துரை, மணப்பாறை |

8. M. தங்கவேல், மணப்பாறை
9. . ராக்கம்மாள், மணப்பாறை
10. P. அழகுமுத்து, மணப்பாறை
11. P. மணிவண்ணன், மணப்பாறை
12. N. சாந்தி, மணப்பாறை
13. A. வின்செண்ட், மணப்பாறை
14. S. மதனகோபால், மணப்பாறை
15. M. ஆரோக்கியமேரி, மணப்பாறை

முறையீட்டு மனுதாரர், 28.01.2014 நாளிட்ட உள்ளாட்சி நிதித்தணிக்கை உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.3350/2013–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை முழுவதும், 1998 – 99 ஆண்டிலிருந்து 2010 – 11–ஆம் ஆண்டு முடிய ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு முறையாக வழங்கப்படவில்லை என நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு செயலாளர் அவர்களுக்கு தனது 20.10.2017 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்திருந்தார். அக்கடிதத்தின் நகலினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளதுடன், மேற்குறிப்பிடப்பட்ட நபர்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய படிவங்களையும் சமர்ப்பித்துள்ளார். மேற்குறிப்பிட்ட நபர்கள் பணியாற்றிய பதவி மற்றும் ஓய்வு பெற்ற ஆண்டு போன்ற விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மேலும், மேற்படி நபர்கள் அவர்களின் கோரிக்கை குறித்து மணப்பாறை நகராட்சி ஆணையருக்கு மனு செய்துள்ளனரா என்ற விவரமும் தெரிவிக்கப்படவில்லை.

2. முறையீட்டு மனுதாரர் திரு இரும்பொறை (எ) பிச்சை அவர்களிடம் 26.02.2010 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. தான் திருச்சி மாநகராட்சியில் தேர்வு நிலை உதவியாளராகப் பணியாற்றி 1993–ஆம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளதாகவும் விசாரணையின்போது தெரிவித்தார். மணப்பாறை நகராட்சியில் ஓய்வூதியர் சங்கத்தினை கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தி அதன் தலைவராக தற்போது வரை இருப்பதாக குறிப்பிட்டார். மேலும், அச்சங்கத்தில் 75 உறுப்பினர்கள் இருப்பதாகவும் அவர்களிடமிருந்து ஆண்டொன்றுக்கு ரூபாய் 100/– வசூலிப்பதாகவும் குறிப்பிட்டார். எனினும், தான் தலைவராக உள்ள சங்கம் அங்கீகரிக்கப்பட்டதா என்ற விவரம் தனக்கு தெரியவில்லை எனவும் அது சம்பந்தப்பட்ட விவரத்தினை பத்து நாட்களில் அளிப்பதாகவும் விசாரணையின் போது தெரிவித்தார். தனது 03.03.2018 நாளிட்ட கடிதத்தில் தமிழ்நாடு ஓய்வு பெற்ற அரசு அலுவலர் சங்கத்திற்கு மட்டுமே அங்கீகாரம் உள்ளதென்றும் மற்ற ஓய்வூதிய அமைப்புகள் அதன் இணைப்பு சங்கங்களே என்ற விவரத்தினை தெரிவித்துள்ளார்.

3. தமிழ்நாடு ஓய்வு பெற்ற அரசு அலுவலர் சங்கத்திற்கு இணைப்பு சங்கமாக செயல்படும் நகராட்சி மற்றும் மாநகராட்சி ஓய்வூதியர் சங்கம் எந்த ஆண்டு மேற்படி சங்கத்துடன் இணைக்கப்பட்டதென தெரிவிக்கவில்லை. தலைவராக இருக்கும் மனுதாரர் 83 அகவையினை கடந்தவர். கடந்த 25 ஆண்டுகளாக அச்சங்கத்தின் தலைவராகவும் செயல்பட்டு வருவதுடன் உறுப்பினர்களிடமிருந்து ஆண்டொன்றுக்கு ரூ.100/–ம் வசூலித்து வருகிறார். இந்நிலையில், ஓய்வூதியர்களின் நலன் கருதி அவர்களுக்கான முறையீட்டு மனுக்களை தானே முன்னின்று இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்துள்ளார்.

4. ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்களுக்கு சேமநலநிதி மற்றும் அத்தொகைக்கான வட்டி ஆகியவற்றை வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் தனது 29.02.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.9019/எல்3/2008 மற்றும் 10.04.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.16729/எல்3/2008–இல் மேற்கொள்ளப் படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து உரிய அறிக்கையினை வழங்கியுள்ளார். மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள அடிப்படை விவரங்களைக்கூட அறியாமல், நகராட்சி மற்றும்

மாநகராட்சி ஒய்வு பெற்றவர்கள் சங்கத்தின் தலைவராக செயல்பட்டு வரும் முறையீட்டு மனுதாரர் சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்காக இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளது ஏற்புடையதாக இல்லை. மேலும், இம்முறைமன்ற நடுவத்தின் கால நேரத்தை வீணாக்கியதாகவே கருத நேரிடுகிறது. ஒய்வு பெற்ற பணியாளர்களுக்கு உதவிட வேண்டும் என முறையீட்டு மனுதாரர் விரும்பியிருந்தால், 10 ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட அலுவலர்களை அணுகி உரிய பணப்பலன்களை ஒய்வு பெற்ற பணியாளர்களுக்குப் பெற்றுத் தந்திருக்க இயலும். எனவே, அங்கீகரிக்கப்படாத சங்கத்தின் தலைவராக செயல்படும் முறையீட்டு மனுதாரர் இனியும் காலம் தாழ்த்தாமல் சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையரை அணுகி ஒய்வு பெற்ற நபர்களுக்கு பணப்பயன்களை பெற்றுத் தர அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் அவ்வாறே ஆணையிடுகிறது.

**2018–** ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், **13–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை–600 032

1. **நகராட்சி ஆணையர்,**
   **மணப்பாறை நகராட்சி,**
   **மணப்பாறை.**

2. **திரு இரும்பொறை (எ) பிச்சை,**
   **23/13, சொக்கலிங்கம் தெரு,**
   **மணப்பாறை – 621 306.**
   **திருச்சி மாவட்டம்.**

3. **நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர்,**
   **நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம்,**
   **தஞ்சாவூர்.**

4. **நகராட்சி நிர்வாக ஆணையர்,**
   **நகராட்சி நிர்வாக ஆணையரகம்,**
   **சேப்பாக்கம், சென்னை – 600 005.**

நகல் : **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**